# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2258/24 - 2021 දෙසැම්බර් මස 15 වැනි බදාදා - 2021.12.15

*2258/24 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

***கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க சட்டத்தின் 16 (2ஈ) பிரிவின் கீழான அறிவித்தல்***

கொள்ளுப்பிட்டியில் இருந்து தெஹிவளை வாய்க்கால் வரை உத்தேச பொழுதுபோக்கு கடற்கரை/ கடலோரத்தை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டம் 1 ஆம் கட்டம்

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை**

*1988 ஆம் ஆண்டின் 64 ஆம் இலக்க மற்றும் 2011 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க ஒழுங்குவிதிகளின் மூலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க, கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் நியதிகளுக்கு அமைவாக பத்தரமுல்ல, செத்சிறிபாய எனும் முகவரியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு மாவட்டத்தில் கொள்ளுப்பிட்டியிலிருந்து தெஹிவளை வாய்க்கால் வரை உத்தேச பொழுதுபோக்கு கடற்கரை/கடலோரமாக அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டம் 1 ஆம் கட்ட பணிக்கு சமர்ப்பிக்கப்பட்ட சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை பொதுமக்களின் பரிசீலனைக்காக கீழ்க் குறிப்பிடப்படும் இடங்களில் நாள் முழுவதும் முற்பகல் 8.30 மணி முதல் பிற்பகல் 4.15 மணி வரை 2021.12.15 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு வைக்கப்பட்டிருக்கும். (வார இறுதி மற்றும் அரச விடுமுறை நாட்களைத் தவிர).*

இதற்கு மேலதிகமாக கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணைய தளமான www.coastal.gov.lk இல் மும்மொழிகளிலும் தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (1) | கரையோரம் பேணல் மற்றும் தாழ்நில அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு | - | 12 ஆவது மாடி, செத்சிறிபாய, இரண்டாவது கட்டம், பத்தரமுல்ல |
| (2) | கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் | - | புதிய செயலகம், 4 ஆவது மாடி, மாளிகாவத்த, கொழும்பு 10 |


1A - G 35554 – 35 (2021/12)



இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

| | | |
|---|---|---|
| (3) | மத்திய சுற்றாடல் அதிகார சபை | - இல. 104, "பரிசர பியச", டென்சில் கொப்பேகடுவ மாவத்த, பத்தரமுல்ல. |
| (4) | மாவட்ட செயலாளர் அலுவலகம் | - கொழும்பு |
| (5) | பிரதேச செயலாளர் அலுவலகம் | - திம்பிறிகஸ்யாய |
| (6) | பிரதேச செயலளார் அலுவலகம் | - தெஹிவளை |
| (7) | மாநகர சபை | - கொழும்பு |
| (8) | மாநகர சபை | - தெஹிவளை, கல்கிஸ்ஸ. |
| (9) | கடற்றொழில் நீரியல் வள திணைக்களம் | - மாவட்ட அலுவலகம், தெஹிவளை |
| (10) | கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம், பிரதேச அலுவலகம் | - மொறட்டு மோதர, மொறட்டுவை |

இந்த உத்தேச செயற்றிட்டத்தினால் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பான அறிக்கை சம்பந்தமாக பொதுமக்களின் கருத்துக்களை 2021.12.15 ஆந் திகதி முதல் 30 நாட்களுக்கு கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்துக்கு எழுத்து மூலமாகச் சமர்ப்பிக்குமாறு அறியத்தருகிறேன்.

பொறியியலாளர் **ஆர். ஏ. எஸ். ரணவக்க,**
பணிப்பாளர் நாயகம்.

கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவத் திணைக்களம்,
4 ஆவது மாடி,
புதிய செயலகம்,
மாளிகாவத்தை,
கொழும்பு 10.
தொலைபேசி இல. : 011-2449754, 011-2387922, 011-2449197.
தொலைநகல் இல. : 011-2438005, 011-2472623.

EOG 12-0123

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.